மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.07/2024
உள்
அசல் வழக்கு எண்.80/2021
––––––––

கருப்பசாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) முத்தையா

2) தங்கம்

3) சொரூபராஜா

4) வேல்முருகன்

5) செவ்வம் (இறப்பு)

6) முருகன்

7) பெருமாள்சாமி

8) வெற்றிவேல்

9) பஞ்சாயத்து தலைவர், நென்மேனி

10) சாத்தூர் வட்டார் வளர்ச்சி அலுவலர்

11) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 04.03.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 05.04.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெயபாண்டி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4, 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஏ.விஸ்வநாத் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முனீஸ்வரன் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், 9 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சங்கர்ராம் அவர்கள் ஆஜராகி

எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், 5ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் பிராதில் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும், 6வது பாராவிலும் 5ம் பிரதிவாதி பெயருக்கு பின்னால் இறப்பு என திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு 28.02.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>

அசல் வழக்கானது பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மனுதாரர் தரப்பில் விசாரணை மேற்கொள்ளுவதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் 5ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டதாக பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அசல் பிராதில் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும், 6வது பாராவிலும் 5ம் பிரதிவாதி பெயருக்கு பின்னால் இறப்பு என திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடியதாக உள்ளது. எனவே, நீதிமன்றம் உத்தரவுப்படி அசல் பிராதில் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும், 6வது பாராவிலும் 5ம் பிரதிவாதி பெயருக்கு பின்னால் இறப்பு என திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>2 முதல் 4, 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>:–

இம்மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது எதிர்மனுதாரர்கள் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனுதாரர்/வாதி தாக்கல் செய்தள்ள மனுவில்

5ம் பிரதிவாதி எந்த தேதியில் இறந்துபோனார் என்பது குறித்து எவ்வித விபரமும் குறிப்பிடப்படவில்லை. மேலும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்த விபரம் மனுதாரர்/வாதியின் அறிவுக்கு எந்த தேதியில் கிடைத்தது என்பது குறித்து எவ்வித விபரமும் குறிப்பிடவில்லை. அதனால் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது abated ஆகிவிட்டது. மேலும், இறந்த 5ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுகளை மனுவில் சேர்க்கக்கோரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை. அதனால் தாவா மனுவானது அவசிய கட்சியை சேர்க்காத தோஷத்தால் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, தாவா மனுதனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) <u>10ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 11ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>:-

தாவா மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். தாவா மனுவில் 5ம் பிரதிவாதி எந்த தேதியில் இறந்தார் என்றோ, 5ம் பிரதிவாதியின் வாரிசுகள் விபரம் குறித்து எந்த விபரமும் தாவா மனுவில் தெரிவிக்கவில்லை. அதனால் மனுதாரர் மனுவானது abated ஆகிவிட்டது. இறந்த 5ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகள் குறித்தும், அவர்களை வழக்கில் சேர்ப்பது குறித்து எந்த விபரமும் கூறவில்லை. எனவே, மனுதாரர் மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**8) தீர்வு:–**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் பிராதில் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும், 6வது பாராவிலும் 5ம் பிரதிவாதி பெயருக்கு பின்னால் இறப்பு என திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு 28.02.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். வழக்கில் உள்ள தரப்பினரின் இறப்பை பதிவு செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். தவறும்பட்சத்தில் அந்த வழக்கில் சரியான தீர்ப்பை எட்டமுடியாமல் போய்விடக்கூடும். இந்த வழக்கிலும் 5ம் பிரதிவாதி இறந்துள்ளதால் அவரது பெயருக்கு பின்னால் இறப்பு என சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 5ம் பிரதிவாதி இறந்துவிட்டபடியால் பிராதில் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும், 6வது பாராவிலும் 5ம் பிரதிவாதி பெயருக்கு பின்னால் இறப்பு என திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு 28.02.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும்

இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.